**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | SC No.57/2023 | எதிரித்தரப்பு | P.W.1 |
| பெயர் | தேவேந்திரன் | கிராமம் | |
| தந்தை / கணவர் பெயர் | சிங்காரவேலன் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.10.2025.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

__முதல் விசாரணை__

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் மணவிடுதி பி.மாத்தூரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி என்னுடைய உடன்பிறந்த சகோதரர். எனக்கும் எனது சகோதரருக்கும் குடும்ப சொத்து உள்ளது. அது கொல்லை நிலம் ஆகும். எனக்கும் எனது சகோதரருக்கும் பாகபிரிவினை ஆகிவிட்டது. மேற்படி பாகவிரிவினையை நாங்கள் பதிவு செய்து கொண்டோம். அந்த பாகபிரிவினையின் பத்திரத்தின் நகல் என்னிடம் உள்ளது. அசல் பத்திரம் எனது அண்ணனிடம் உள்ளது. 09.01.2022 தேதியில் காலை சுமார் 10.00 மணியளவில் நான் என்னுடைய கொல்லை நிலத்திற்கு சென்றேன். எனது நிலத்திற்கு பக்கத்திலேயே ஆஜர் எதிரி பழனிசாமிக்கு கொல்லை நிலம் உள்ளது. நான் சென்ற பார்த்தபோது அங்கு சண்முகராஜ், ராமமூரத்தி ஆஜர் எதிரி பழனிசாமி ஆகியோர் நின்று கொண்டிருந்தனர். எதிரி பழனிசாமிக்கு சொந்தமான மரத்தை வெட்ட விலை பேசிக்கொண்டிருந்தார்கள். என் வீட்டு அசல் பத்திரம் பழனிசாமியிடம் உள்ளதை என்னிடம் கொடுத்துவிட்டு மரத்தை வெட்டுங்கள் என்று பழனிசாமியிடம் சொன்னேன். இந்தா பத்திரத்தை எடுத்து வருகிறேன் என்று கூறிவிட்டு சென்றார். அதன்பிறகு நான் எனது கொல்லை நிலத்திற்கு நகர்ந்து சென்றுவிட்டேன். ஒரு பத்து நிமிடம் இருக்கும். ஆஜர் எதிரி துண்டால் மறைத்து வைத்துக்கொண்டு கத்தியை எடுத்து வந்து எனது இடதுபுற வயிற்றில் குத்தி

கிழித்தார். எனது குடல் வெளியே வந்துவிட்டது. அதன்பிறகு எனது வயிற்றில் வலது புறமும் குத்தினார். குத்தும்போது இது தான்டா உனக்கு பத்திரம் தேவடியா மகனே என்று கெட்டவார்த்தையால் திட்டினார். என்னிடம் காட்டப்படும் கத்தியால் தான் எதிரி பழனிசாமி என்னை குத்தினார். எதிரி பழனிசாமி என்னை கத்தியால் குத்திவிட்டு ஓடிவிட்டார். அதன்பிறகு எனது மகளுக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தேன். எனது மகளும் சம்பவ இடத்திற்கு வந்தார். என்னை புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். என்னிடம் காட்டப்படுவது தான் நான் சிகிச்சையில் இருக்கும்போது வாங்கிய புகார் வாக்குமூலம் ஆகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1. அதன்பிறகு அரசு மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக திருச்சி காவேரி மருத்துவமனைக்கு என்னை சிகிச்சைக்கு சேர்த்தார்கள். நான் காவேரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். அதன்பிறகு 3 மாதங்கள் கழிதது எனக்கு அறுவை சிகிச்சை செய்தார்கள். அதன்பிறகு 7 மாதங்கள் தொடர்ந்து சிகிச்சையில் இருந்தேன். என்னை குத்த பயன்படுத்திய கத்தி சா.பொ.1. வீட்டு பாதை சம்மந்தமான என்னிடம் கையெழுத்து பெற்ற பத்திரம் எதிரி பழனிசாமியிம் உள்ளது. அதை திருப்பி கொடுத்துவிட்டு மரத்தை வெட்டி கொள்ள சொன்னேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்குவிசாரணை</u>

சுமாா 20 வருடங்களுக்கு முன்பு எனது அண்ணன் மணி, நான் மற்றும் எனது தம்பியான ஆஜர் எதிரி ஆகியோர்களுக்கிடையே எங்கள் நிலம் சம்மந்தமாக பாகம் செய்து அந்த நிலங்களை அவரவர் தனித்தனியே அனுபவித்து கொள்ளவேண்டியது ஒரு நோட்டில் எழுதி கொண்டோம் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு அனுபவித்து வரும்போது எனக்கும், எதிரி பழனிசாமிக்கும் இடையே சிறு சிறு தகராறு ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். எதிரியின் இடத்தில் இருந்த ஆர்எஸ்பதி மரத்தை நான் வெட்ட விடாமல் தடுப்பதாக கூறி

எதிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். ஆனால் அந்த ஆர்எஸ்பதி மரம் எனக்கும், எனது அண்ணனுக்கும் சேர்த்து பங்கு இருந்த நிலத்தில் இருந்து வந்தது. அந்த நிலத்தின் சர்வே எண் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. எதிரி பழனிசாமியின் நிலத்திற்கு கிழக்கே உள்ள நிலம் எனது மனைவி செல்லம் பெயரில் கிரையம் பெறப்பட்டுள்ளது. எனது மனைவி செல்லம் பெயரில் உள்ள மேற்படி நிலத்திற்கு தனியாக பாதை இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த நிலத்திற்கு உடனடியாக மேற்கே உள்ள நிலம் எதிரி பழனிசாமி பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலம் என்று சொன்னால் அந்த நிலத்தின் சகோதரர்களான எங்கள் மூன்று பேருக்கும் பாக பாத்தியத்தை உள்ளது. பிரச்சனை நடந்த சமயத்தில் தேக்குமரங்கள் இருந்த இடம் எனக்கு சொந்தமாக இருந்தது. மரத்தை மட்டும் எதிரி பழனிசாமி வெட்டிக்கொள்ள அனுமதித்தேன்.

(தொடர் குறுக்கு விசாரணைக்காக கால அவகாசம் வழங்கப்பட்டது.)

Sd/–தேவேந்திரன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.